உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவ ஜயம்

॥ वेदसारशिवस्तोत्रम् ॥

॥ வேத³ஸாரஶிவஸ்தோத்ரம் ॥

ஆதிசங்கரர் அருளியது
தமிழ் உரை:
ஞானபாஸ்கர பிரம்மஸ்ரீ **P.N. நாராயண சாஸ்திரிகள்**

पशूनां पतिं पापनाशं परेशं
गजेन्द्रस्य कृति वसानं वरेण्यम् ।
जटाजूटमध्ये स्फुरद्गा वारिं
महादेवमेकं स्मरामि स्मरारिम् ॥ १ ॥

பஶூநாம் பதிம் பாபநாஶம் பரேஶம்
க³ஜேந்த்³ரஸ்ய க்ருதி வஸாநம் வரேண்யம் ।
ஜடாஜூடமத்⁴யே ஸ்பு²ரத்³வா வாரிம்
மஹாதே³வமேகம் ஸ்மராமி ஸ்மராரிம் ॥ 1 ॥

1. எல்லா ஜீவர்களுக்கும் தலைவனாயும், பாபத்தைப் போக்கடிப்பவராயும், உயர்ந்த யானையின் தோலை உடுத்தியிருப்பவரும், தலைமுடியின் நடுவில் ஒளிவிடுகின்ற கங்கை நீரைக் கொண்டவராயும், காமனையெரித்தவராயும் ஒரே கடவுளாயுமுள்ள பரமேச்வரனை மனதில் நினைக்கின்றேன்.

(குறிப்பு.) "இமம் பசும் பசுபதே தே" என்னும் யஜுர் வேதம் 3-வது காண்டத்தில் உள்ள வாக்யமே இந்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது. ஜீவர்களுக்குத் தலைவனுன பசுபதியின் அனுமதி பெற்றே யாகங்கள் நடத்த வேண்டும் என்பது அந்த மந்திரத்தின் பொருள்.

महेशं सुरेशं सुरारातिनाशं
विभुं विश्वनाथं विभूत्यङ्गभूषम् ।
विरूपाक्षमिन्द्वर्कवह्नित्रिनेत्रं
सदानन्दमीडे प्रभुं पञ्चवक्त्रम् ॥ २ ॥

மஹேஶம் ஸுரேஶம் ஸுராராதிநாஶம்
விபு⁴ம் விஶ்வநாத²ம் விபூ⁴த்யங்க³பூ⁴ஷம் ।
விரூபாக்ஷமிந்த்³வர்கவஹ்னித்ரிநேத்ரம்
ஸதா³னந்த³மீடே³ ப்ரபு⁴ம் பஞ்சவக்த்ரம் ॥ 2 ॥

2. கடவுள்களுக்கெல்லாம் தலைவரும், தேவர்களுக்கு அரசரும், தேவர்களின் பகைவர்களை அழிப்பவரும், எங்கும் நிறைந்தவரும், உலகத்திற்குத் தலைவரும், உடலில் திருநீற்றையணிந்தவரும். மிக அழகிய கண்களை உடையவரும், சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூவரையும் கண்களாக உடையவரும், எப்பொழுதும் மகிழ்ச்சியோடிருப்பவரும், எல்லாவற்றையும் தன்னிடத்தே கொண்டவரும் ஐந்து முகங்களும் உள்ள பரமசிவனைத் துதிக்கின்றேன்.

गिरीशं गणेशं गले नीलवर्णं
गवेन्द्राधिरूढं गुणातीतरूपम् ।
भवं भास्वरं भस्मना भूषिताङ्गं
भवानीकलत्रं भजे पञ्चवक्त्रम् ॥ ३ ॥

கி³ரீஶம் க³ணேஶம் க³லே நீலவர்ணம்
க³வேந்த்³ராதி⁴ரூட⁴ம் கு³ணாதீதரூபம் ।
ப⁴வம் பா⁴ஸ்வரம் ப⁴ஸ்மனா பூ⁴ஷிதாங்க³ம்
ப⁴வானீகலத்ரம் ப⁴ஜே பஞ்சவக்த்ரம் ॥ 3 ॥

3. கைலையங்கிரிக்குத் தலைவரும், பூதக்கூட்டங்களுக்கு அரசரும், கழுத்தில் நீலநிறமுடையவரும், சிறந்த காளை மாட்டின் பேரில் ஏறிக் கொள்பவரும் முக்குணங்களுக்கு அப்பாற்பட்டவரும், உலகம் உண்டாவதற்கு காரணமானவரும், பவானி தேவியை மனைவியாயுடையவரும், ஐம்முகத்தோனுமான பரமேச்வரனைத் தொழுகின்றேன்.

(குறிப்பு) யஜுர் வேதத்திலுள்ள (4-வது காண்டம்) சதருத்ரம் என்னும் ருத்ர ப்ரச்னத்தில் கிரிச:, கணபதி:, நீலக்ரீவ: பவ: முதலிய பல பெயர்களால் துதிக்கப் படும் பரமேச்வரனே இந்த சுலோகத்தினுல் சொல்லப்படுகின்ருர்.

शिवाकान्त शंभो शशाङ्कार्धमौले
महेशान शूलिञ्जटाजूटधारिन् ।
त्वमेको जगद्व्यापको विश्वरूपः
प्रसीद प्रसीद प्रभो पूर्णरूप ॥ ४ ॥

ஶிவாகாந்த ஶம்போ4 ஶஶாங்கார்த4மௌலே
மஹேஶான ஶூலிஞ்ஜடாஜூடதா4ரின் ।
த்வமேகோ ஜக3த்3வ்யாபகோ விஶ்வரூப:
ப்ரஸீத3 ப்ரஸீத3 ப்ரபோ4 பூர்ணரூப ॥ 4 ॥

4. மங்களரூபிணியான பார்வதியின் நாயகரும், சுகத்திற்கிருப்பிடமானவரும், பிறை ச்சந்திரனை தலையில் கொண்டவரும், பிரம்மா முதலிய கடவுளுக்கெல்லாம் கடவுளா னவரும், சூலத்தைக் கையிலுள்ளவரும், ஜடை முடியை உடையவருமான நீர் ஒருவரே உலகத்தில் நிறைந்தவரும், உலகமேயானவரும், எங்கும் நிறைந்த உருவமுள்ள பிரபு. என்னிடம் கருணை காட்டுவீராக.

(குறிப்பு) “ருதகும் ஸத்யம் பரம்ப்ரம்ம” எனும் தைத்திரீய உபநிஷத் 4-வது ப்ரச்ன வாக்கியத்திலுள்ள பரமேச்வரனே இங்கு சொல்லப்படுகிறார்.

परात्मानमेकं जगद्बीजमाद्यं
निरीहं निराकारमोंकारवेद्यम् ।
यतो जायते पाल्यते येन विश्वं
तमीशं भजे लीयते यत्र विश्वम् ॥ ५ ॥

பராத்மானமேகம் ஜக3த்3பீ3ஜமாத்3யம்
நிரீஹம் நிராகாரமோங்காரவேத்3யம் ।
யதோ ஜாயதே பால்யதே யேன விஶ்வம்
தமீஶம் ப4ஜே லீயதே யத்ர விஶ்வம் ॥ 5 ॥

5. முதலானதும், ஒன்றேயான பரமாத்மாவும் உலகமுண்டாவதற்குக் காரண மானவரும், ஆசையற்றவரும் உருவமற்றவரும், "ஓம்" என்னும் எழுத்தால் அறியத் தக்கவரும் எங்கிருந்து உலகமுண்டாயிற்றோ எதனால் காப்பாற்றப்பட்டதோ எங்கு மறைகிறதோ அந்த அத்வைத ஆத்மரூபியுமான பரமேச்வரனைத் தொழுகிறேன்.

(குறிப்பு) தைத்தரீய உபநிஷத்தில் பிரணவமே பிரம்மம் என்றும், எங்கும் நிறைந்த பரமாத்மாவிடமிருந்தே காணப்படுகின்ற உலகம் உண்டாக்கிக் காக்கப்பட்டு அடங்கி விடுகிறதும், உருவம் பெயர் குணம் ஒன்றுமில்லாது எங்கும் நிறைந்த பரமாத்மா ஒன்றே உண்மை என்று கூறப்பட்டுள்ளதையே ஸ்ரீ ஆசார்யாள் இந்த சுலோகத்தில் கூறியுள்ளார்.

न भूमिर्नं चापो न वह्निर्न वायु-
र्न चाकाशमास्ते न तन्द्रा न निद्रा ।
न चोष्णं न शीतं न देशो न वेषो
न यस्यास्ति मूर्तिस्त्रिमूर्तिं तमीडे ॥ ६ ॥

ந பூ⁴மிர்னம் சாபோ ந வஹ்நிர்ன வாயு-
ர்ன சாகாஶமாஸ்தே ந தந்த்³ரா ந நித்³ரா ।
ந சோஷ்ணம் ந ஶீதம் ந தே³ஶோ ந வேஷோ
ந யஸ்யாஸ்தி மூர்திஸ்த்ரிமூர்திம் தமீடே³ ॥ 6 ॥

6. பூமி, ஜலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களாயுமில்லை. சோம்பல், தூக்கம், சூடு, குளுமை, இருப்பிடம், உருமாற்றம் ஒன்றும் பரமேச்வரனுக்கில்லை. மூன்று கடவுள் உருவம் கொண்ட அந்த பரமேச்வரனைத் துதிக்கின்றேன்.

(குறிப்பு) தைத்திரீயோபநிஷத் 4-வது ப்ரச்னம், விரஜா ஹோம ப்ரகரணத்தில் சொல்லப்படும், எல்லாவற்றையும் கடந்த பரமாத்மாவான பரமேச்வரனே இந்த சுலோகத்தில் சொல்லப்படுகிறார்.

अजं शाश्वतं कारणं कारणानां
शिवं केवलं भासकं भासकानाम् ।
तुरीयं तमःपारमाद्यन्तहीनं
प्रपद्ये परं पावनं द्वैतहीनम् ॥ ७ ॥

அஜம் ஶாஶ்வதம் காரணம் காரணானாம்
ஶிவம் கேவலம் பா⁴ஸகம் பா⁴ஸகானாம் ।
துரீயம் தமஃபாரமாத்³யந்தஹீனம்
ப்ரபத்³யே பரம் பாவனம் த்³வைதஹீனம் ॥ 7 ॥

7. பிறப்பற்றவரும், எப்பொழுதுமுள்ளவரும், காரணங்களுக்கெல்லாம் காரணரும், ஒளியைத் தருகிற சூரிய சந்திரர் முதலியவர்களுக்கும் ஒளியைத் தருபவரும், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களைச் செய்யும் கடவுள்களுக்கு மேலான நான்காமவரும், முதல் முடிவற்றவரும், மிகப் பரிசுத்தமானவரும், இரண்டற்றவரும், பரமாத்மாவுமான பரமேச்வரனைச் சரண் அடைகிறேன்.

(குறிப்பு) "ந தத்ர ஸூர்யோ பாதி" என்னும் கடோபநிஷத்தில் சொல்லப்பட்ட வேத வாக்யப்படி சூரியன், சந்திரன் நக்ஷத்திரங்கள், நெருப்பு, மின்னல் எல்லாம் பரமாத்மாவிடமிருந்து ஒளியைப் பெற்றே பிரகாசிக்கின்றன - என்னும் வேதத்தின் பொருளையே ஆசார்யாள் இங்கு விளக்கியுள்ளார்.

नमस्ते नमस्ते विभो विश्वमूर्ते
नमस्ते नमस्ते चिदानन्दमूर्ते ।
नमस्ते नमस्ते तपोयोगगम्य
नमस्ते नमस्ते श्रुतिज्ञानगम्य ॥ ८ ॥

நமஸ்தே நமஸ்தே விபோ⁴ விஶ்வமூர்தே
நமஸ்தே நமஸ்தே சிதா³னந்த³மூர்தே ।
நமஸ்தே நமஸ்தே தபோயோக³க³ம்ய
நமஸ்தே நமஸ்தே ஶ்ருதிஜ்ஞானக³ம்ய ॥ 8 ॥

8. எங்கும் நிறைந்தவரும், உலகமாய் ஆனவருமான உமக்கு வணக்கம். அறிவு மகிழ்ச்சி வடிவான உமக்கு வணக்கம். தவத்திஞலும் யோகத்திஞலும் அடையத் தகுந்த உமக்கு வணக்கம். வேதத்தில் கூறப்பட்டுள்ள அறிவிஞலேயே அடையத் தகுந்த உமக்கு வணக்கம்.

(குறிப்பு) "விக்ஞாநாதாநந்தோ ப்ரம்மயோநி:" என்னும் தைத்திரீய உபநிஷத் வாக்யம் ஞானத்திஞலேயே ப்ரம்மத்தையறிந்து ப்ரம்மமே ஆகலாம் என்று கூறியுள்ளதையே இங்கு ஆசார்யாள் சொல்லியுள்ளார்கள்.

प्रभो शूलपाणे विभो विश्वनाथ
महादेव शंभो महेश त्रिनेत्र ।
शिवाकान्त शान्त स्मरारे पुरारे
त्वदन्यो वरेण्यो न मान्यो न गण्यः ॥ ९ ॥

ப்ரபோ⁴ ஶூலபாணே விபோ⁴ விஶ்வநாத²
மஹாதே³வ ஶம்போ⁴ மஹேஶ த்ரிநேத்ர ।
ஶிவாகாந்த ஶாந்த ஸ்மராரே புராரே
த்வத³ன்யோ வரேண்யோ ந மான்யோ ந க³ண்ய꞉ ॥ 9 ॥

9. எல்லாவற்றிற்கும் தஜலவஞன சூலத்தைக் கையில் ஏந்திய உலகத்திற்கு அரசஞன மஹாதேவன்- மஹேசன் - முக்கண்ணன், மங்களஶயான பார்வதியின் கணவன், அமைதி பெற்றவன், காமஜனயெரித்தவன், முப்புரங்களஶயழித்தவஞன பரமேச்வரஞன உன்ஜனத் தவிர உயர்ந்தவராகவோ கௌரவிக்கத் தக்கவராகவோ வேறு யாரையும் நான் எண்ணமாட்டேன்.

(குறிப்பு) 'கைவல்யோபநிஷத்" “உமா ஸஹாயம்" என்று ஆரம்பிக்கும் வாக்யத்திஞல் உமையோடு கூடிய பரமேச்வரனே எல்லா முறையாலும் மேலாக அடையத்தக்கவர் என்று கூறியிருப்பதையே இங்கு குறிப்பிட்டு உள்ளார்.

शंभो महेश करुणामय शूलपाणे
गौरीपते पशुपते पशुपाशनाशिन् ।
काशीपते करुणया जगदेतदेक-
स्त्वंहंसि पासि विदधासि महेश्वरोऽसि ॥ १० ॥

ஶம்போ⁴ மஹேஶ கருணமய ஶூலபாணே
கௌ³ரீபதே பஶுபதே பஶுபாஶநாஶின் ।
காஶீபதே கருணயா ஜக³தே³ததே³க-
ஸ்த்வம்ஹம்ஸி பாஸி வித³தா⁴ஸி மஹேஶ்வரோ(அ)ஸி ॥ 10 ॥

10. சூலத்தைக் கையில் கொண்ட கருணையே உருவான கௌரி நாயகனே, ஜீவர்களுக்குத் தலைவனே, ஜீவர்களின் கர்மாவாகிற கட்டையழிக்கிற காசிநகரத் தலைவனே, ஜீவர்களிடம் உள்ள தயையினால் நீயே உண்டு பண்ணி, காத்து உன்னுள் அடக்கி எல்லோருக்கும் மேலான நிகரற்ற பரமேச்வரனாய் விளங்குகிறீர்.

त्वत्तो जगद्भवति देव भव स्मरारे
त्वय्येव तिष्ठति जगन्मृड विश्वनाथ ।
त्वय्येव गच्छति लयं जगदेतदीश
लिङ्गात्मके हर चराचरविश्वरूपिन् ॥११॥

த்வத்தோ ஜக³த்³ப⁴வதி தே³வ ப⁴வ ஸ்மராரே
த்வய்யேவ திஷ்ட²தி ஜக³ன்ம்ருட³ விஶ்வநாத² ।
த்வய்யேவ க³ச்ச²தி லயம் ஜக³தே³ததீ³ஶ
லிங்கா³த்மகே ஹர சராசரவிஶ்வரூபின் ॥11॥

11. .காமனையெரித்த தேவனே! 'பவ' என்னும் பெயருடைய உம்மிடமிருந்து உலகம் உண்டாகிறது. 'ம்ருட' என்னும் பெயரிலிருந்து காக்கப்படுகிறது, 'ஹர' என்னும் பெயரில் இந்த உலகம் ஒடுங்குகிறது. அசைவது அசையாததுமான இந்த உலகத்தின் மூன்று தொழில்களுக்கும் மூலகாரணமாயுள்ளது உன் லிங்க உருவான வடிவமேயாகும்.

வேத ஸாரம், வேதத்தின் முடிவான உபநிஷத்துகள். அதில் சொல்லப்படுவது உருவமற்ற ஒன்றேயான பரம் பொருள். அந்த இரண்டற்ற பரமாத்மாதான் பரமேச்வரன் எனப்படுகிறார். ஆகவே ஸ்ரீ சங்கரபகவத்பாதர்கள் வேத ஸாரமான உபநிஷத்துகளில் சொல்லப்பட்ட சிவபிரான் மீதான இந்த துதியைப் படித்து இம்மை மறுமைப் பயனை அடையவே செய்திருக்கிறார்கள்.